DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 24.07.2025.

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.03/2024 |
| Deposition of Witness for Prosecution | : | PW.6 |
| Name | : | கணேஷ் (எ) முருகப்பன் |
| Father Name | : | பழனியப்பன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. P. Maruthachalam, Junior Assistant, of this court, on 24.07.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் தற்போது சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், பில்லேரியில் குடியிருந்து காப்பி தோட்டம் வைத்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். நான் ஏற்காடு கீரைக்காட்டிலுள்ள கிலேஷ்புருக் எஸ்டேட்டில் கடந்த 10.03.2024-ம் ஆண்டு விசிட்டராக பணிபுரிந்து வந்தேன். ஆஜர் எதிரி மேற்படி எஸ்டேட்டில் தொழிலாளியாக வாட்ச்மேன் இல்லாத சமயத்தில் வாட்ச்மேன் வேலை செய்து வந்தார். கடந்த 10.03.2024-ம் தேதி மாலை மேற்படி எஸ்டேட்டில் பணிசெய்யும் தொழிலாளிகள் தோட்டத்தில் போய் பார்த்தபோது அங்கு ஒரு மிளகு மூட்டை இருந்ததாகவும், அந்த தகவலை எஸ்டேட் மேலாளிடம் சொன்னதாகவும் அந்த மிளகை எடுப்பதற்கு யார் வருகிறார்கள் என்பதை பார்ப்பதற்கு காவலாளிகள் எஸ்டேட் மேலாளர் மற்றும்

எஸ்டேட் ஓட்டுநர் மற்றும் பிரவீன்குமார் என்பவரும் தோட்டத்தில் காத்துக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி தோட்டத்திற்கு ஓரமாக இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு தோட்டத்திற்கு உள்ளே வந்து அங்கிருந்த மிளகு மூட்டையை தூக்கியதாகவும், அதை பார்த்த மேலாளர் மற்றும் அங்கிருந்த தொழிலாளர்கள் அவரை பிடிப்பதற்கு சென்றபோது மூட்டையை போட்டுவிட்டு அங்கிருந்த வேலியில் குதித்தபோது ஆஜர் எதிரிக்கு காலில் காயம் ஏற்பட்டு ஓடமுடியாமல் நின்றாதகவும், பின்பு ஆஜர் எதிரியை பிடித்து எனக்கும் மற்றொரு விசிட்டராக பணிபுரியும் சுப்பரமணி என்பவருக்கு தகவல் சொன்னார்கள். நான் அவர்களிடம் ஆஜர் எதிரியின் இருசக்கர வாகனத்தை வாங்கி வைத்துக்கொண்டு ஆஜர் எதிரியை மறுநாள் காலை அழைத்துவருமாறு சொல்லி அனுப்பிவிட்டோம். மறுநாள் காலை 08.00 மணியளவில் சம்பவம் நடந்த எஸ்டேட்டிற்கு சென்றேன். என்னுடன் எஸ்டேட்டில் ஒப்பந்த பணி செய்யும் மாது என்பவரும் எஸ்டேட் மேலாளர் மற்றும் காவலாளிகள் இருந்தார்கள். 08.30 மணிக்கு சுப்பிரமணியும் வந்தார். அதன் பின்பு ஆஜர் எதிரி 09.00 மணியளவில் வந்தார். நாங்கள் அவரை அழைத்து விசாரித்தபோது மிளகு, காப்பியை திருடியதை ஒப்புக்கொண்டார். எஸ்டேட்டிலிருந்து திருடிய 3 மூட்டை காப்பி மற்றும் 1 மூட்டை மிளகு ஆகியவற்றை அவரது வீட்டில் வைத்திருப்பதாகவும் அதை தந்துவிடுவதாகவும் சொன்னார். அதன் பிறகு நாங்கள் எஸ்டேட்டிலிருந்து ஆட்களை அனுப்பி ஆஜர் எதிரியின் வீட்டிலிருந்து பொருட்களை எடுத்துவரச்சொன்னோம். அப்போது அங்கிருந்த ஆஜர் எதிரியின் மனைவி வீடியோ படம் எடுத்ததாகவும், நீங்கள் எடுத்துச்சென்ற பொருட்களை திருப்பி வந்து கேட்டால் என்னசெய்வதென்று அதற்கு ஆதாரமாக படம் பிடிப்பதாக சொன்னார். நானும், சுப்பிரமணியும் பொருள் நமக்கு கிடைத்துவிட்டது அதனால் ஆஜர் எதிரியை விட்டுவிடலாம் என்று சொன்னோம். பிறகு மறுநாள் ஆஜர் எதிரியின் தந்தை மற்றும் மனைவி எஸ்டேட்டிற்கு வந்து எல்லோரிடமும் ஆஜர் எதிரியை திருடன் என்று ஏன் சொன்னீர்கள் என்று தகராறு செய்தனர்.

அவர்கள் தகராறு செய்ததால் மேலாளர் சுரேஷ் இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

இல்லை.

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-. R. Elanchezhian
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.